## இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் - 2015

---

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 1,756,148 தொகை பெறவேண்டிய வட்டி வருமானக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக முதலீட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதன் காரணமாக பெறவேண்டிய வட்டி வருமானம் மற்றும் முதலீட்டுப் பெறுமதி என்பன அப்பெறுமானத்தால் முறையே குறைத்தும், அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தில் காணப்படுகின்ற கணக்கு மீதிகள் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையினதும், இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தினதும் கணக்கு மீதிகளுடன் ஒப்பீடு செய்த போது பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்கு விடயம் | இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் கணக்குகளின் பிரகாரம் | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கணக்குகளின் பிரகாரம் | இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியககத்தின் கணக்குகளின் பிரகாரம் | வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | | ரூபா |
| (அ) | கடன்பட்டோர் | 7,944,793 | 6,512,810 | - | 1,431,983 |
| (ஆ) | கடன்கொடுத்தோர் | 983,872 | 5,059,699 | - | 4,075,827 |
| (இ) | கடன்பட்டோர் | 3,841,016 | - | மீதியொன்று காண்பிக்கப்படவில்லை | 3,841,016 |

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கீழே காண்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு விடயங்களுக்கும் முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | இறுதியிருப்பு | 2,327,707 | (i) விரிவான பட்டோலை<br>(ii) இருப்பு மெய்மையாய்வு அறிக்கை |
| (ஆ) | பெற வேண்டிய கணக்குகள் | | |
| | (i) வியாபாரக் கடன்பட்டோர் | 16,103,023 | மீதி உறுதிப்படுத்தல் |
| | (ii) நானாவித கடன்பட்டோர் மற்றும் பெறவேண்டிய வைப்புக்கள் | 6,744,480 | |
| | (iii) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து கிடைக்க வேண்டிய பணம் | 7,944,793 | |
| (இ) | நிலையான சொத்துக்கள் (2008 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதி) | 129,897,122 | மீதியைக் கண்டுபிடித்த முறையினைக் காண்பிக்கின்ற விரிவான அறிக்கை |
| (ஈ) | அபிவிருத்திச் செலவினம் | 1,788,459 | விரிவான பட்டோலை |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டு முதல் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து கிடைக்க வேண்டிய மீதியாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 5,396,779 தொகை மற்றும் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 2,238,717 தொகை என்பன இனங்காணப்பட்டிருந்த போதிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வியாபாரக் கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்ட மீதிகளில் ரூபா 1,662,788 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 12,206,640 தொகை 01 வருடத்திற்கு மேல் 03 வருடங்களுக்குக் குறைவான காலமாகவும், ரூபா 3,527,025 தொகை 01 வருடத்திற்குக் குறைவான காலமாகவும் மீதிகளில் உள்ளடங்கியிருந்தது.

(இ) பெற வேண்டிய கணக்குகளுக்காக மற்றும் பெற வேண்டிய வைப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட மீதிகளில் ரூபா 7,114,279 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 3,616,980 தொகை 01 வருடத்திற்கு மேற்பட்டு 03 வருடங்களுக்குக் குறைந்த காலமாகவும், ரூபா 1,410,000 தொகை 01 வருடத்திற்குக் குறைந்த காலமாகவும் நிலுவை மீதிகளில் உள்ளடங்கியிருந்தது.

(ஈ) அட்டுறு செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட மீதிகளில் ரூபா 1,653,760 தொகை 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 11,649,560 தொகை 01 வருடத்திற்கு மேற்பட்டு 02 வருடங்களுக்கு குறைவான காலமாகவும், ரூபா 19,424,716 தொகை 01 வருடத்திற்கு குறைவான காலமாகவும் செலுத்த வேண்டிய மீதிகளில் உள்ளடங்கியிருந்தது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1999 இன் சுற்றுலா ஹோட்டல் உறுப்புரைக் கோவையின் 02 ஆம் இலக்க பிரிவு | சுற்றுலா ஹோட்டலொன்றை நடாத்திச் செல்லும் போது வியாபாரத்தைப் பதிவு செய்து அதற்காக அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், நிறுவகத்தால் நடாத்திச் செல்லப்படுகின்ற சமுத்திரா ஹோட்டல் பதிவு செய்யப்படாதிருந்ததுடன் அனுமதிப்பத்திரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்று நிரூபம் | சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி வன்பொருட்கள் மற்றும் மென் பொருட்கள் என்பவற்றிற்காக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.5 ஆம் பிரிவு | தொழிற்படு மூலதனத்தை செயற்திறனாக முகாமை செய்யும் நோக்கில் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு, இருப்பு காலப்பகுப்பாய்வு, பழமை வாய்ந்த காலாவதியான மற்றும் மெதுவாக நகரும் இருப்பும் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான கூற்று என்பன பணிப்பாளர் சபையால் மாதாந்தம் மீளாய்வு செய்ய வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய பெறுகைகள் முகவர் நிறுவக சுற்றறிக்கை இல.08 | (i) வருடாந்தம் வழங்குனர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை |
| | (ii) கூறுவிலை திறக்கும் சந்தர்ப்பத்திற்காக கூறுவிலை கோரல்களுக்கு பதிலளித்த வழங்குனர்கள் / முகவர் நிறுவனத்திலிருந்து பங்குபற்றச் செய்யப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 110,385,385 மிகையொன்றாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 146,281,118 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் விளைவுகளில் ரூபா 35,895,733 வீழ்ச்சியொன்றைக் காட்டியது. சுற்றுலா அபிவிருத்தி வரி வரமானம் ரூபா 10,966,361 இனாலும், குடியகல்வு வரி வருமானம் 17,852,995 இனாலும் அதிகரித்திருந்த போதிலும், சம்பளம், வேதனம் மற்றும் ஊழியர் ஊதியம் என்பன ரூபா 49,536,675 இனால் அதிகரித்தமை இந்த நிதி விளைவின் வீழ்ச்சிக்கு அடிப்படைக் காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நிதி விளைவுகளில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்த போதிலும் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிதி விளைவுகளில் அதிகரிப்பு காணப்பட்டது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளின் வீழ்ச்சி சதவீதம் 24.5 ஆகக் காணப்பட்டது. எனினும், நிதி விளைவுகளில் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைச் சீராக்கும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 166,366,966 தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு மீளாய்வாண்டுவரை சீராக அதிகரித்திருந்ததுடன் அது 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 310,384,960 ஆகக் காணப்பட்டது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் வருமானம் ரூபா 441.7 மில்லியனாக இருந்ததுடன், அது முன்னைய ஆண்டின் ரூபா 425.7 மில்லியன் வருமானத்துடன் ஒப்பிடுகையில் 3.7 சதவீத அதிகரிப்பாக இருந்தது. அதே நேரம் முன்னைய ஆண்டில் கற்பித்தல், பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 279 மில்லியன் உடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 331 மில்லியன் செலவிட்டிருந்தது. அதன் பிரகாரம் 18.6 சதவீத அதிகரிப்பைக் காண்பித்தது.

# 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

### 4.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன், அந்தப் பந்தியின் (இ) உப பிரிவின் பிரகாரம் உரிய ஆண்டின் வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத்திட்டம் (Actvity Plan), அமுல்படுத்தும் கால அட்டவணை (Time Line) மற்றும் அந்த செயற்பாடுகளில் எதிர்பார்த்த பூர்த்தி / விளைவு (Output / Outcome) உள்ளடக்கப்பட வேண்டும். இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தால் மேற்கூறப்பட்ட பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்குரிய செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் நிறுவகத்தின் செயலாற்றல் மதிப்பீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக செயல்நடவடிக்கைத் திட்டம் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுற்றுலா வளங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் மூலம் நிறுவகத்திற்கு தேசிய தொழிற்தகைமை (NVQ) பெற்றுக்கொள்வதற்கான ஆலோசனைகள் மற்றும் உதவிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் நிறுவகத்தால் இதுவரை தேசிய தொழிற்தகைமையுடன் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகம் நடாத்துகின்ற நான்கு வருட முகாமைத்துவ டிப்ளோமாவிற்காக முழுமையான பட்டமொன்றாக அரசினதோ, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதோ அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினதோ அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) வருடாந்தம் வழங்குனர்கள் பதிவு செய்யப்படாமையினால் கட்டுப்பாடுகளின்றி திறந்த சந்தையிலிருந்து இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திற்கும் அதில் நடாத்தப்படுகின்ற சமுத்திரா ஹோட்டலுக்கும் உணவு ரீதியான மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு மூன்று மாத காலத்திற்காக மாத்திரம் ரூபா 4,205,537 தொகையான செலவினமொன்று செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) பண்டாரவல ே ஹாட்டல் பாடசாலை முகாமைத்துவத்தினால் அரசாங்கத்தின் கேள்வி நடைமுறைகளின் பிரகாரம் புதிய வழங்குனர்களைத் தெரிவு செய்யும் திட்ட முறைமையொன்று பின்னப்பற்றப்படாமையினால் 2015 மார்ச் மாதம் முதல் 2015 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை திறந்த சந்தை விலையின் அடிப்படையில் ஹோட்டல் பாடசாலைக்குத் தேவையான ரூபா 1,066,755 தொகையான உணவு சார்ந்த மூலப்பொருள் பெறப்பட்டிருந்தது.

(உ) இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்திற்குரிய கட்டிடம் அமைந்துள்ள காணியின் உரித்து கணக்காய்வுத் திகதியான 2018 திசெம்பர் 26 ஆந் திகதி வரை விடுவிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

நிறுவகத்தால் நடாத்திச் செல்லப்படுகின்ற சமுத்திரா ஹோட்டலில் ஆண்டின் வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஹோட்டல் அறை இரவுகள் (Room Nights) 4745 காணப்பட்டதுடன் அதில் நிறுவகத்திற்கு அடையக் கூடியதாக இருந்த ஹோட்டல் அறை இரவுகள் 1446 அதாவது 30 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

### 4.4 வாகனப் பயன்பாடு

மீளாய்வாண்டில் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனத்திற்காக ஏற்பட்ட கிரயம் மற்றும் வாடகைக்கு எடுக்கப்பட்ட வாகனம் ஓடிய தூரம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 662,200 பெறுமதியான கையற்ற 52 தேக்கு கதிரைகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் சிற்றுண்டிச்சாலையின் திறந்த பகுதியில் பாதுகாப்பின்றி குவித்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஹோட்டல் பாடசாலையில் 7 ஆவது மாடியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 300,000 பெறுமதியான 04 சமர் கூடாரங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.

(இ) நிறுவகத்தின் பிரதான கட்டிடத்தில் 2172 சதுர அடிப் பிரதேசம் எந்தவித அறவீடுகளுமின்றி வெளி நிறுவனத்தின் பாவனைக்காக வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவகத்திற்குச் சொந்தமான பிரதான அலுவலகக் கட்டிடத்திற்காக இட அளவை முகாமைத்துவம் செய்து பயன்பாட்டிற்கு எடுக்காமையினால் 8547 சதுர அடி அளவொன்று நிறுவகத்தின் ஆரம்பம் முதல் மீளாய்வாண்டு வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் உத்தியோகத்தர்களை மாற்றும் முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் முகாமைத்துவத்தால் அவ்வவ்போது மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 163 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியனர் 101 ஆக இருந்தனர். பணிப்பாளர் நாயகம், பதிவாளர் மற்றும் பணிப்பாளர் (நிதி) போன்ற 03 பதவிகளும் மீளாய்வாண்டின் போதும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2018 ஒக்தோபர் 19 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 134 மற்றும் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பெறுகைகள் திட்டம்

2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகத்திற்காக மூன்று ஆண்டு பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது 22 வருமானம் மற்றும் செலவின விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைக்கிடையே 23 சதவீதத்திலிந்து 100 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.5 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகத்தால் 2013 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை 2018 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.6 தீர்வு காணப்படாத கணக்காய்வு பந்திகள்**

2014 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) கொழும்பு ஹோட்டல் பாடசாலையில் வகுப்பறைகளுக்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 2,725,000 பெறுமதியான 200 மேசைகளும் கதிரைகளும் வீதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்தக் கொள்வனவுகளின் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த நிறுவனம் மாதிரிகள் இணங்காமையினால் நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும், கொள்வனவு செய்யப்பட்டிருந்த பொருட்களும் அந்த மாதிரிகளில் குறிப்பிடப்பட்ட நியமங்களுக்கு முரணாக இருந்தது.

(ஆ) நிறுவகத்தின் ஹோட்டல் பயிற்சிப் பாடசாலைக்கு அல்லது நிறுவகத்திற்குரிய பிரதேச ஹோட்டல் பாடசாலைகளுக்குரித்தற்ற, தனியார் ஹோட்டல் பாடசாலையொன்றின் 54 மாணவர்களுக்கும், சுற்றுலா ஹோட்டல் பாடசாலை பட்டதாரிகளின் சங்கத்தின் பங்குற்றலுடன் நடாத்தப்பட்ட போட்டிகளுக்குரிய வெற்றியாளர்களுக்கு கையளிப்பதற்காக எவ்வித அடிப்படையுமின்றி 2014 ஆம் ஆண்டின் போது 245 சான்றிதழ் பத்திரங்களும், அதற்கு முன்னைய ஆண்டுகளின் போது 900 சான்றிதழ் பத்திரங்கள் வீதமும் வழங்கப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது, இந்த பட்டதாரிகளின் சங்கத்தினால் விநியோகிக்கப்பட்ட ஒரு சான்றிதழ் பத்திரத்தில் நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பதவிக்குப் பதிலாக நிறுவகத்தின் சிரேஷ்ட விரிவரையாளர் ஒருவர் கையொப்பமிட்டிருந்தார்.

(இ) ஹோட்டல் பாடசாலைக்காக நன்கொடையாகக் கிடைக்கின்ற மதுபான வகைகள் களஞ்சியத்திற்கு கையளிக்கப்படாமல் உணவுப் பிரிவின் தலைவரின் பொறுப்பில் பதிவேடுகளுக்கு கொண்டுவராமல் வைத்திருந்தார். அந்த இருப்புக்கள் பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் ரூபா 35,000 பெறுமதியான 12 வைன் போத்தல்கள் காணாமல் போயிருந்ததுடன் மேலும், 06 மதுபான போத்தல்களின் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டதுடன் அவை மதுபான செயன்முறைப் பரிசோதனைகளுக்காக பயன்படுத்தப்பட்டமைக்கான சான்றுகளும் காணப்படவில்லை.

(ஈ) 2013 ஏப்ரல் மாதம் முதல் 2014 யூன் 30 ஆந் திகதி வரை நிறுவகத்தின் பதவியணியினருக்கு லொன்றி சேவைகளை வழங்கியமையின் காரணமாக ஏற்பட்ட நேர்க் கிரயம் ரூபா 887,028 ஆகும். இந்தக் கிரயம் பதவியணியினர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) நிறுவகத்தின் உணவுப் பிரிவிற்கு சேர்க்கப்பட்ட இரண்டு விரிவுரையாளர்களுக்கு 2013 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் முதல் 2014 ஆம் ஆண்டின் யூன் மாதம் வரை வகுப்பு அறிக்கை புத்தகத்தின் படி நிகழ்த்தப்பட்ட விரிவுரை மணித்தியால அளவை விஞ்சி ரூபா 972,865 செலுத்தப்பட்டிருந்தது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்படாமை. |
| (ஆ) பொருள் இருப்புப் பதிவேட்டுக் கட்டுப்பாடு | சில பிரிவுகளுக்காக பொருள் இருப்புப் பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் பொருள் மெய்மையாய்வு அறிக்கையும் சமர்ப்பிக்கப்படாமை. |
| (இ) இருப்பு மெய்மையாய்வு | சில இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளில் இருப்பு மெய்மையாய்வில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் பெயர் மற்றும் கையொப்பம் இடப்படாமை, இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளில் தரவுகளை உள்ளடக்கும் போது இடம்பெற்ற திருத்தங்களுக்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் சிற்றொப்பம் இடப்படாமை |
| (ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) சில விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ஆண்டில் செலவினம் இடம்பெறாமை.<br>(ii) மதிப்பீடு செய்யப்படாத வருமானம் மற்றும் செலவினங்களுக்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தமை. |